# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1843/13 - 2013 දෙසැම්බර් මස 31 වැනි අඟහරුවාදා - 2013.12.31

1843/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: பிசேப/இ/1/2/125.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/13/2012/ஈ/307.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக் கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலாளர் பிரிவில் பிரிவு இல. 252 சீ. கொரொக்ககமட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட காணி வரைபட இல 620075 தொகுதி 04 இன் 03 ஆம் தொகுதியில் தாள் இல. 05 இல் குறிப்பிடப்பட்ட 0.0893 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு.

01. **துண்டு இல. 170:** காணியின் பெயர்: துனுமடலககவத்த; உரிமை கோருபவர்: ஏ. எம். இஸாட், இல 182/10, கொரொக்ககமட, பலாங்கொடை; விஸ்தீரணம்: 0.0893 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2014 ஆம் ஆண்டு சனவரி 29 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பலாங்கொடை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்தக்காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந்திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

சம்பிக நிரோஷ தர்மபால,
பிரதேச செயலாளர்,
பலாங்கொடை.

பிரதேச செயலகம்,
பலாங்கொடை,
2013, திசெம்பர் 30.

1-419

### திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*காணி அமைச்சின் குறிப்பிலக்கம்.: LD/05/2006/VET/489.*

*பிரதேச செயலாளரின் குறிப்பிலக்கம்.: HIK/DS/ LND/04/01/03.*

இலங்கைச் சனநயக சோசலிச் குடியரசின் 1723/26 ஆம் இலக்க 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் வியாழக்கிழமை 15 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆவது பிரிவின் கீழான அறிவித்தல் தொடர்பாக.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சுனாமியில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்காக காணி எடுத்தல் தொடர்பாக உரித்துப் பேசுகின்ற அனைவரும் என்னைச் சந்திக்க வேண்டிய தினம் 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணி எனக் குறிப்பிடப்படடிருப்பினும் அது 2014 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி பி.ப. 1.00 மணிக்கு எனத் திருத்தியமைக்கப்படுவதாகவும் அதன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகவல்களை அறிவிக்க வேண்டிய திகதி 2014.04.29 ஆந் திகதி எனவும் திருத்தம் செய்கிறேன்.

தமயந்தி பரணகம,
பிரதேச செயலாளர்,
ஹிக்கடுவை.

பிரதேச செயலகம்,
ஹிக்கடுவை,
2013, திசெம்பர் 18.

1-425